அ.வ.எண்: 108/2023 நாள்: 20.04.2026

வா.சா.1 –கணபதி

சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

சாட்சியின் ஆதார் அட்டை சரிபார்க்கப்பட்டது.

<u>**1 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**</u>

1. நான் தாவா வழக்கில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மைதான் என்றால் சரிதான். நான் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாவா சொத்தில் எனக்கு உரிய பங்கை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து தற்போது யார் சுவாதீனத்தில் உள்ளது என்றால், எனது அப்பா பெயரில் உள்ளது. நான் சர்வே எண். 24/69 க்கு தான் வழக்கு தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரிதான். மேற்படி சர்வே எண் தற்போது யார் பெயரில் உள்ளது என்றால் எனது அப்பா சேவுகன் பெயரில் உள்ளது. தாவாசத்திற்கு தற்போது துரைராஜ் என்பவர் பெயரில் பட்டா உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. **(சாட்சியிடம் தாவாசொத்தின் தற்போதைய பட்டா காட்டப்பட்டது). மேற்படி பட்டா பி.வா.சா.ஆ. 1 ஆவணமாக ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. தாவா சொத்து சம்பந்தமாக நான் பரிகாரம் கேட்டுள்ளேன் என்றும்,

அது தற்பொழுது துரைராஜ் என்பவரது பெயரில் இருப்பதால் நான் சுவாதீன மீட்பு பரிகாரம் கேட்டிருக்க வேண்டும் என்று சொன்னால் சொத்தை எனது தந்தை பெயர்தான் இருந்தது அவர்கள் பெயர் மாற்றிக் கொண்டார்கள். அதனால் நான் சரியான முத்திரை தீர்வை கட்டவில்லை என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் எனது தந்தை பெயருக்கு ஒப்படைப்பு வழங்கப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் பத்தாவது பத்தியில், மேற்படி இடத்தில் குடியிருப்புக்காக வீடு மட்டும் தான் கட்ட வேண்டும் என்றும், அதனை உட்பிரிவு செய்யக்கூடாது என்ற நிபந்தனை உள்ளதால் அதில் நான் பாகப்பிரிவினை கேட்க இயலாது என்று சொன்னால் சரியல்ல. **மேற்படி ஒப்படைப்பு ஆவணம் பி.வா.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எனது தந்தை இறக்கும்போது நல்ல நிலைமையில் தான் இருந்தார் என்றால் சரிதான் அவர் யாரையும் சார்ந்து இருக்க வில்லை என்றால் சரிதான்.

3. நானும் 1ம் பிரதிவாதியும் தற்போது குடியிருந்து வரும் சொத்து யாருடையது என்றால் எனது தந்தையுடைய சொத்து ஆகும். மேற்படி சொத்து சம்பந்தமாக எனது தந்தை, எனது அண்ணனுக்கு ஒரு இனாம்செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் சரிதான், என் அண்ணனுக்கு பாதி எனக்கு பாதியாக எழுதிக் கொடுத்தார். மேற்படி 1ம் பிரதிவாதியின் வீடு எந்த பக்கம் உள்ளது என்றால் அவர் வீடு

மேற்கு பக்கம் உள்ளது, நான் கிழக்கு பக்கம் உள்ளேன். கிழக்கு பக்கம் உள்ள நான் தற்போது குடியிருந்து வரும் வீடு யார் பெயர் உள்ளது என்றால் என் தந்தை பெயரில் உள்ளது. **மேற்படி இனாம் செட்டில்மென்ட் ஆவணம் பி.வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. மேற்படி நான் குடியிருந்து வரும் வீட்டை எதற்காக பாகப்பிரிவினை சேர்க்கவில்லை என்றால் அது சம்பந்தமாக பிரச்சனை இல்லை அதனால் சேர்க்கவில்லை.

4. மேற்படி நான் குடியிருந்து வரும் வீட்டை எனது தந்தை 1ம் பிரதிவாதியின் மனைவியிடம் அடமானம் கொடுத்துள்ளார் என்றும் அதனால் அதில் நான் குடியிருக்க தகுதியற்றவன் என்றும் சொன்னால் சரியல்ல. மேற்படி அடமான பத்திரம் ஆவணமாக குறியீடு செய்யப்படுகிறது. **மேற்படி அடமான பத்திரம் பி.வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி அடமானம் திருப்பப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி அடமானம் திருப்படாததால் நான் குடியிருந்து வரும் சொத்திற்கு 1ம் பிரதிவாதியின் மனைவி தான் உரிமையாளர் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி அடமானத்தை பற்றி எனக்கு தெரியாது. நான் தற்போது குடியிருந்து வரும் வீட்டிற்க்கான வீட்டு வரி ரசீது யார் பெயரில் உள்ளது என்றால் எனது தந்தை பெயரில் இருந்து வந்தது, எனது பெயரில் மாற்றுவதற்காக நடவடிக்கை எடுத்து வருகிறேன்.

5. நான் குடியிருந்து வரும் சொத்து சம்பந்தமாக வில்லங்கம் போட்டு

பார்த்தேனா என்றால் இன்னும் இல்லை. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடைய தந்தையுடையது தான் என்றால் சரிதான்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

PREMI R

Digitally signed by PREMI R
Date: 2026.04.20 14:37:02 +0530